மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய சர்க்காரில் இருந்து நிதி வந்து கொண்டுதான் இருக்கிறது. வழக்கமாகத் தருகிற நிதியை இந்த ஆண்டு குறைத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 13 லட்சம் ரூபாயைக் குறைத்திருக்கிறார்கள். அதைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி எழுதியிருக்கிறோம்.

கூட்டுறவுப் பண்ணை சாகுபடி

* 136 வினா—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. வெ. முனுசாமி :
திரு எஸ். இராமச்சந்திரன் :
} மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுப் பண்ணை சாகுபடி எங்கெங்கு வெற்றிகரமாக நடக்கிறது ?

(இ) எத்தனை ஏக்கர் நிலங்கள் கூட்டுறவுப் பண்ணை சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் ஹரிஜனங்கள் பொதுமக்கள், முன்னாள் படைவீரருக்காக நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள், குத்தகைக்காரர் பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற தனிப்பட்ட வகைப் பண்ணை சங்கங்கள், மனநிறைவுதரும் வகையில் செயல்பட்டு வருகின்றன. கூட்டுப் பண்ணைச்சங்கங்கள் (Joint Farming Societies) தொகுதிப்பண்ணைச் சங்கங்கள் (Collective Farming Societies) போன்ற பிறவகைச் சங்கங்கள் இம்மாநிலம் முழுவதும் பரவலாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் பணி தேவையான அளவு செவ்வனே நடைபெறவில்லை.

(இ) இம்மாநிலத்தில் செயல்பட்டுவரும் 290 கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களினால் 27,909 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் விளைச்சலின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

திரு. கரு. சீமைச்சாமி : பொதுவாக, இந்தப் பண்ணைகள் சரியாக நடைபெறவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் இதற்காக ஏன் அரசாங்கம் பணத்தை வீணாகச் செலவழிக்க வேண்டும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டு வகையான சங்கங்களைப் பற்றிச் சொன்னேன். தனிப்பட்டவர்களுடைய பொறுப்பில் நடத்தப்படக்கூடியவை (இன்டிவிஜுவல் ஃபார்மிங் சொசைடிஸ்)—குத்தகைக்காரர்களால் நடத்தக் கூடியவை நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. ஜாயிண்ட் ஃபார்மிங் சொசைடிசும், கலெக்டிவ் ஃபார்மிங் சொசைடிசும் சரியாக நடைபெறவில்லை. இந்த வகை சொசைடிகளை மீண்டும் ஆரம்பிப்பதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரிக்கு அருகிலுள்ள விவசாயக் கூட்டுப் பண்ணை நிலங்கள் குத்தகைக்கு விடப்படுவதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்திருக்கிறதா ? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பற்றிய விவரம் இல்லை.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : கூட்டுறவுப் பண்ணையின் நன்மையைப்பற்றி விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டுதோறும் 100 ஏக்கர் முதல் 200 ஏக்கர் வரை கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆங்காங்குள்ள விவசாயிகள் முன் வந்து அவர்களாகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொண்டால் நிச்சயம் இந்த அரசாங்கம் உதவி செய்யும்.

1968 மார்ச் 4]

திரு. கே. போஜன் : நீலகிரி மாவட்டத்தில் தெங்குமராடா என்ற இடத்தில் உள்ள கூட்டுறவுப் பண்ணை நல்ல முறையில் நடந்து வருகிறது. அதே போன்று நீலகிரி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கூட்டுறவுப் பண்ணைகளை ஏற்படுத்த அமைச்சரவை உடனடியாகப் பரிசீலித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தெங்குமராடா கூட்டுறவுச் சங்கம் தனிப்பட்ட வகையைச் சேர்ந்தது. தனித் தனியாக நிலத்தைப் பிரித்துக் கொண்டு உழுது சாகுபடி செய்வதில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொண்டு நல்ல முறையில் சாகுபடி செய்து வருவது உண்மை. அது போன்ற நிலைமை இருப்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து தகவல் கொடுத்தால் அரசாங்கம் நிச்சயம் உதவி செய்யும்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : கூட்டுறவுப் பண்ணை அமைப்பில் சாகுபடி செய்யாதவர்களும், செல்வாக்குள்ளவர்கள் என்ற நிலையிலே சங்கங்களிலே தலைவர்களாக இருக்கிற காரணத்தால் தஞ்சை மாவட்டத்தில் அந்தச் சங்கங்கள் சரிவர நடைபெறவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? புதிதாக நல்ல சட்டங்களைக் கொண்டு வந்து அதைத் திருத்த சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாவதன் : கூட்டுறவு அமைப்புகளின் தோல்விக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது ஒரு காரணம். அது மட்டும் காரணமல்ல ; பல காரணங்கள் இருக்கின்றன. கூட்டுறவு அமைப்பின் அவசியத்தை அதிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் உணர்ந்து உண்மையாகவே கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

THIRU K. VINAYAKAM : Sir, the bane of our country as far as agriculture is concerned is fragmentation of land and very small land holdings. If the Government is going to depend upon the voluntary effort of the farmers for co-operative farming, it will take a long time. Will the Government consider the possibility of bringing in suitable legislation for abolition of small holdings and fragmentation of holdings and bringing the land at least under the co-operative movement, if not under the public sector ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கக் கூடிய கூட்டுறவு அமைப்பு முறை வாலண்டரி பேசிஸ்தான். டிஸ்இன்டகிரேஷன் ஆஃப் லாண்ட் ஹோல்டிங்ஸ் இருக்கக் கூடாது என்ற கருத்து பிளானிங் கமிஷனால் வற்புறுத்தப்பட்டு வருகிறது. சில மாநிலங்களில் இதைப் பற்றி ஆராய்ந்து சட்டம் கொண்டு வரப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதைத் தமிழ் நாட்டிலே செயல்படுத்த முடியுமா என்பதைப் பற்றி அவர்களுடைய அனுபவத்தை ஒட்டியும், அங்கு இயற்றப்பட்ட சட்டங்களை ஒட்டியும் இன்றைக்கு இந்த அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அமைச்சர் அவர்கள் 291 கூட்டுப் பண்ணைகள் இருப்பதாகச் சொன்னார்கள். இவற்றிலே திருச்சி மாவட்டத்திலே எத்தனை பண்ணைகள் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தகவல் இல்லை.

DR. H. V. HANDE : The Minister stated in his reply that 27,000 odd acres had been brought under co-operative farming. What is the total quantity of paddy that the Government got from these 27,000 acres and what is the difficulty for this Government in using tractors for ploughing, because in co-operative farms it is possible to use tractors ? What is the main reason for these societies incurring a heavy loss ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிராக்டர்கள் வாங்கி உபயோகிப்பது அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களுடைய பொருளாதார வயபிலிடியைப் பொருத்து அமைகிறது. ஜாயிண்ட் ஃபார்மிங் என்ற முறையில் எல்லோரும் சேர்ந்து விவசாயம் செய்து அதிலிருந்து வரக்கூடிய லாபத்தைப் பிரித்துக் கொள்வது என்ற அடிப்படையில் இருக்கக்கூடிய அமைப்புகள் 100. அந்த நூறும் நல்ல முறையில் நடைபெறவில்லை. அரிசனங்கள், எக்ஸ்-சர்விஸ்மென், பொதுமக்கள் சேர்ந்து நிலத்தைப் பிரித்துக் கொண்டு தனித் தனியாக உழுது பயிரிட்டு அவர்களுக்குரிய வருமானத்தை அவர்களே எடுத்துக் கொண்டு, பொது நன்மைக்குரிய காரியங்களைப் பொதுவாக அமைத்துக் கொண்டு ஒரு முறையில் இருக்கக் கூடிய இன்டிவிஜுவல் ஃபார்மிங் சொசைடிகள் 190. இவை நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. இதற்கு அரசாங்கத்தில் இருந்து கடனும் கொடுக்கப்படுகிறது. இதனுடைய வருமானத்தைப் பற்றிக் கேட்டார்கள். இன்டிவிஜுவல் டைப் ஆஃப் சொசைடியில் கிட்டத்தட்ட 14 லட்சம் ரூபாய் கிராஸ் வருமானம் வந்திருக்கிறது.

திரு. இரா. மாணிக்கவாசகம் : கோவை மாவட்டத்தில் முகசிமங்கலத்தில் உள்ள கூட்டுறவுப் பண்ணையில் நஷ்டம் ஏற்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதிலுள்ள அங்கத்தினர்கள் அதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று கோரியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : பூமிதானத்தின் மூலம் கிடைத்த நிலங்களைக் கொண்டு எத்தனை கூட்டுறவுப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிராமதானத்தின் மூலம் கிடைத்த நிலங்களில் 30 பண்ணைகளும், பூதானத்தின் மூலம் கிடைத்த நிலங்களில் ஒரு பண்ணையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தக் கூட்டுறவுப் பண்ணைகள் சரியாக இயங்காமல் இருப்பதற்குக் காரணம் இவர்களுக்குப் போதுமான அளவுக்குக் கடன் வசதிகள் செய்து எப்படி சாகுபடி செய்ய வேண்டுமென்பது பற்றி அவர்களைப் பயிற்றுவிக்க ஒரு அதிகாரியையோ, நிர்வாகியையோ போடாமல் இருப்பதுதான். ஆகவே, அரசாங்கம் அந்தப் பண்ணைகளில் டெமான்ஸ்ட்ரேட்டர் போன்ற அதிகாரிகளைப் போட்டு பண உதவி செய்வதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆங்காங்கு உள்ள பொதுமக்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவு சங்கங்கள் அமைத்து கூட்டுப் பண்ணையாக அமைத்து நடத்தி வந்தால் அவர்களுக்கு டெக்னிகல் அசிஸ்டன்ஸ் வேண்டுமென்றால் அதற்கு விவசாய இலாகா உதவி செய்யும். கடன் கொடுப்பதை பொருத்த அளவுக்கு இன்டிவிஜுவல் டைப் ஆஃப் சொசைடிக்கு 19 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். உதவித் தொகையாக ரூபாய் 16,67,309 கொடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் கொடுத்தாலும் கூட்டுறவின் தாத்பரியத்தை உணர்ந்து செயல்பட்டால்தான் இவை வெற்றி பெற முடியும். பொதுவாக, சரியாக நடைபெறாத சங்கங்களைப் பற்றியெல்லாம் அரசாங்கப் பதிவாளர்கள் ஆராய்ச்சி செய்து ஏன் அவை சரியாக நடைபெறவில்லை என்பதைப் பற்றி அறிக்கை அனுப்பி அரசாங்கம் அதன்பேரில் மேற்கொண்டு எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி உத்தரவிடுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : கூட்டுறவுப் பண்ணைகளில் நஷ்டம் ஏற்படுவதற்குப் பிரதான காரணம் நிர்வாகஸ்தர்களாக இருக்கிறவர்கள் அதிகமான மெம்பர்களைச் சேர்க்கக்கூடாது என்று தடுத்து வருவதும், ஆங்காங்குள்ள அதிகாரிகள் பொய் வவுச்சர்கள் நிர்வாகத்தினர் போட உடந்தையாக இருப்பதால்தான் எக்கச்சக்கமாக நஷ்டம் ஏற்பட்டு அரசாங்கத்தின் உதவிகள் பயனற்றுப் போகும் நிலையில் இருக்கிறது. அந்த நிலையைப் போக்க என்ன முயற்சிகள் எடுக்கப்படும்?

1968 மார்ச் 4]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கத்தினர் அவர்கள் சொல்வது, ஜாயிண்ட் ஃபார்மிங் சொஸைட்டிஸ், கலெக்டீவ் ஃபார்மிங் சொஸைட்டீஸ் பொறுத்தவரையில் உண்மையாக இருக்கலாம். ஆகவே அதை மறுபடியும் ஆரம்பிப்பதாக இல்லை என்ற முடிவிற்கு வந்திருக்கிறது. 'இன்டி விஜுவல் டைப் ஆஃப் ஃபார்மிங் சொஸைட்டீஸ்'—தனித்தனியாக ஓனர்ஷிப் ஐந்து ஏக்கர், ஆறு ஏக்கர் என்றிருப்பவை—நன்கு செயல்பட்டு வருகின்றன. கடன் கொடுப்பது என்பது எல்லோருக்கும் கொடுக்க முடியுமா என்பது ஒரு கஷ்டமான பிரச்னை. அதோடு தண்ணீர் பிரச்னையும் இருக்கிறது. இந்த இரண்டு பிரச்னைகளையும் தீர்க்கக் கூடிய சங்கங்கள் நல்லமுறையில் நடக்கின்றன. நீலகிரியில் தெங்குமராடா என்ற இடத்தில் நல்லமுறையில் அது வெற்றி பெற்றிருக்கிறது. இதை முழுப் பரிசீலனை செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : கூட்டுறவுப் பண்ணைகள் பூமியில் பாடு படுகிறவர்கள் சேர்ந்து நடத்துகிற பண்ணைகள் தான் பயனுள்ளதாக இருக்கும். ஆளை வைத்து பண்ணை நடத்துவது என்ற முறையில் சாக்காரிடம் கடன் கோரினால்—அவர்கள் சரியாக நடத்த மாட்டார்கள் என்பது பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நீண்டதொரு பொருளாதாரப் பிரச்னை. கூட்டுறவு சங்கங்கள் ஆங்காங்கே நிலத்தில் பாடுபடுகிறவர்கள் என்ற முறையில்தான் கொடுக்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் உரிமையாளர்களோடு உழைப்பவர்களும் தேவைப்படுகிறார்கள். அவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். நிலம் இல்லாமல் நிலத்தில் பாடுபடுகிறவர்களுக்குத்தான் இந்த இயக்கத்தில் முதல் இடம் கொடுக்க வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: ஜாயிண்ட் பார்மிங் சொஸைட்டீஸ் நல்லமுறையில் நடைபெறவில்லை. ஆனால் அதே நேரத்தில் இன்டி விஜுவல் டைப் ஆஃப் பார்மிங் சொஸைட்டீஸ் நல்ல முறையில் நடக்கின்றன என்று சொன்னார்கள். பொதுவுடைமையாக இருக்கக்கூடிய சொஸைட்டி கள் நல்லமுறையில் நடக்கவில்லை. ஆனால், தனிவுடைமையாக உள்ள சொஸைட்டிகள் நல்லமுறையில் நடக்கின்றன என்று அர்த்தமாகிறது. ஆகவே பொதுவுடைமையை கைவிட்டு விட்டு தனிவுடைமைக்கு அதிகமாக ஊக்கம் கொடுக்க இந்த சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவுடைமை, தனிவுடைமை என்பது பெரிய பொருளாதாரப் பிரச்னை. அது நீண்ட நாட்களாக விவாதிக் கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் கூட்டுறவு அமைப்பு சமுதாயத்தில் ஒரு மாற்றம் ஏற்பட கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் பொதுவுடைமை யும் கிடையாது, தனிவுடைமையும் கிடையாது. அவர்கள் சேர்ந்து கூட்டாக வாழவேண்டும் என்ற தத்துவத்தில் செயல்பட்டு வருகிறது.

திரு. வ. க. இராமராசன் : பவானிசாகர் அருகாமையில் மங்களப்பட்டி என்ற இடத்தில் ஒரு கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்த அரசுக்கு உத்தேச முண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தயிடத்தில் ஒரு காட்டுப்பகுதி இருக்கிறது. அது தெங்குமராடா சங்கத்தின் பக்கத்தில் அமைந்திருக்கி றது. அங்கும் அப்படி ஒரு அமைப்பு ஆரம்பித்தால் நல்லமாதிரி பயிரா கும். விளைச்சல் ஏற்படும் என்ற கருத்து அரசாங்கத்தின் கருத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தண்ணீர்வசதி இருக்கிறதா என்பதுபற்றி முடிவு செய்த பின்னர்தான் முடிவு எடுக்க முடியும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: கூட்டுறவுப் பண்ணைகளும், கூட்டுறவுச் சங்கங்களும் சரியாகச் செயல்படுகிற மாநிலங்களுக்கு ஒரு ஆய்வுக்குழுவை அனுப்பி அவர்கள் எந்த முறையில் செயல்பட்டுவருகிறார்கள் என்பதைக் கண்டறிந்து இங்குள்ள குறைபாடுகளை நீக்கும் முறையில புனர்நிர்மாணம் செய்யும் வகையில் அரசாங்கம் அதுபற்றி யோசிக்குமா ? கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அவற்றை எப்படி நடத்துவது என்பது

பற்றியெல்லாம் பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு முன்வருமா ? பிற மாநிலங்களில் இது சரியான முறையில் செயல்படவில்லை என்ற நிலையிருக்குமானால் பிற நாடுகளில் எப்படி இவை செயல்படுகின்றன என்பதைக் கண்டறிய வெளிநாட்டிற்கு ஒரு ஆய்வுக்குழுவை அனுப்பி அங்குள்ளவற்றைக் கண்டறிந்து அதேபோன்று நம் மாநிலத்திலும் செயல்படுத்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டில் அறுபது ஆண்டுகள் பழமையானது. அறுபது ஆண்டுகளாக இந்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கென்றுள்ள பயிற்சிகள் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களோடு தொடர்பு கொள்ள நம் அதிகாரிகள் அங்கு செல்கிறார்கள். அங்குள்ள அதிகாரிகள் இங்கு வருகிறார்கள். சமீபத்தில்கூட உத்தரப் பிரதேசத்தில் இருந்து வந்த ஒரு அமைச்சர் நம் மாநிலத்திற்கு வந்து எங்களோடு பேச்சுவார்த்தை நடத்தும் போது இங்கு கூட்டுறவுத்துறை நல்லமுறையில் நடக்கிறது என்றும், சூப்பர் மார்கெட் மிக நல்லமுறையில் நடக்கிறது, நாங்களும் அதைப் பின்பற்ற ஆசைப்படுகிறோம் என்று சொன்னார்கள். இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. நம் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அப்போதைக்கப்போது இதைப் பரிசீலித்து இந்த இயக்கம் நல்லமுறையில் நடைபெற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. அ. ஆறுமுகம் : கூட்டுறவுப் பண்ணை அமைக்கவேண்டுமென்றால் எவ்வளவு பேர்கள் சேரவேண்டும் ? எவ்வளவு ஏக்கர்கள் இருந்தால் ஆரம்பிக்கலாம் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்கென்று குறிப்பிட்ட விதிமுறைகள் கிடையாது. "வயபிலிட்டி ஆஃப் தி சொஸைட்டி ", அவர்கள் வருமானம் செலவு, தண்ணீர் வசதி இவைகளைப் பொறுத்து அப்போதைக்கப்போது ஆங்காங்குள்ள அதிகாரிகள் பரிசீலித்து முடிவு எடுப்பார்கள்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, the abolition of the small landholdings will force the petty landholders to become labourers and this will lead to capital and labour troubles. It is also against the established traditions of our country. So, instead of thinking on these lines, will the Hon. Minister be pleased to state whether he will give more incentive and encouragement to petty landholders ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறு சிறு நிலச்சுவான்தாரர்கள் இருப்பது உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு தடை என்ற கருத்தும் இருக்கிறது. பெரிய பெரிய நிலப்பரப்பு இருந்தால்தான் வசதியோடு எக்கனமிக் வயபிலிட்டியோடு உணவு உற்பத்தி பெருக வாய்ப்பிருக்கிறது என்ற ஒரு கருத்து இருக்கிறது. நம் நாட்டைப் பொறுத்த வரையில் சிறு நிலச்சுவான்தார்கள் அதிகமாக இருப்பதால் எப்படி உணவு உற்பத்திக்கு அவர்களை அதிகமாகப் பயன்படுத்தலாம் என்ற கருத்தைத் திட்டக் கமிஷனும் நீண்டநாட்களாக பரிசீலித்து வருகிறது. அதை இந்த அரசும் இப்போது பரிசீலனை செய்யத் தொடங்கியிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : வேறு நாடுகளில் கூட்டுறவுப் பண்ணைகளில் சேரக்கூடிய விவசாயிகளுக்கு விசேஷ சலுகைகள் அளிப்பதன் மூலம், அங்கு கூட்டுறவு நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. உற்பத்தியும் பெருகியிருக்கிறது. கூட்டுறவில் சேர்ந்து தங்கள் நிலங்களைக் கொடுத்த அந்த மெம்பர்களுக்கு நிலவரி கிடையாது. அவர்கள் உற்பத்திப் பொருள்களுக்கு அதிகவிலை கொடுப்பது என்று

1968 மார்ச் 4]

இப்படியெல்லாம உதவி செய்வதால் அத்திட்டம் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அந்த மாதிரி ஊக்கம் கொடுக்க இந்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதும் கூட்டுறவுத் திட்டத்தின் அடிப்படை அதுதான். தனிப்பட்ட நிலம் வைத்திருப்ப வர்கள் தங்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தண்ணீர் வசதி போன்ற மற்ற வசதிகளை பெறமுடியாது. பொருளாதார வசதிக் குறைவு இருக்கும் என்ற அடிப்படையில் பல பேர்கள் சேர்ந்து செய்தால் அதற்காக அரசாங்கம் கடன் வசதி போன்ற மற்ற வசதிகளை செய்து கொடுக்கிறார்கள். அவர்களின் உற்பத்திப் பொருள்களை மார்க்கெட்டிங் சொஸைட்டிகள், கூட்டுறவு ஸ்டோர்கள் மூலம் விற்கவும் வசதி இருக்கிறது.

Mosquito Menace in City

*137 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the mosquito menace in the City of Madras ; and

(*b*) if so, the steps that are being taken to eradicate this nuisance ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : சென்னை நகரில் கொசு தொல்லை அதிகமாகி விட்டது என்பதில் எவருக்கும் அபிப்பிராயபேதம் இல்லை. கொசு உற்பத்தியாவது பக்கிங்காம் கனல், ஐயா வசிக்கிற அடையாறு பகுதி இங்குதான் கொசு அதிகமாக உண்டாகிறது.

Whereas the Buckingham Canal and the Adyar river have been considered as the breeding centres for these mosquitoes, will the Government take interest to see that it is entirely eradicated from the State of Madras by undertaking large-scale underground drainage schemes and also filling up storm water drainage. Lastly, may I also know whether the mosquitoes that are troubling the Hon. Minister for Public Health are bigger than the mosquitoes that are troubling me in Triplicane ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கொசுத் தொல்லை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. கொசுக்கள் மாம்பலம், அடையாறு என்று வித்தியாசம் பாராட்டுவதில்லை. என்னைவிட அவர்களுக்குத்தான் அதிகத் தொல்லை கொடுத்துவரும் என்று எதிர் பார்க்கிறேன். அத்தொல்லையைத் தீர்க்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கார்ப்பரேஷனல் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் அதில் அக்கறை கொண்டு தீவிர நடவடிக்கைகள் மூலம் கொசுத் தொல்லையை தவிர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எம். கண்ணப்பன் : தலைவரவர்களே, நிலையாக ஒரிடத்தில் இல்லாமல் அடிக்கடி இடம் விட்டு இடம் மாறும் சில கொசுக்கள் இருக்கின்றனவே, அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ? மு' ப. 10.00

* 81–82-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.